பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 08 | ஞாயிற்றுக்கிழமை 23.12.2018 | கதிர் 48

### இனிது ரகசியம் அல்ல!

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் 'சொற்விற்பனம்' நிகழ்வு நேற்று மாலை கொழும்பில் மயூரபதி மண்டபத்தில் நடந்தது. நான்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை மேடையில் ஏற்றி கேள்வி கேட்டுத் துளைத்தெடுத்தனர். அதில் வெளிப்பட்ட இரண்டு விடயங்களை பக்கம் 02

# கொட்டித் தீர்த்த கன மழையால் வெள்ளக்காடாகியது கிளிநொச்சி!

## இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறப்பு மீட்புப் பணிகளில் ராணுவத்தினர் மும்முரம்

கிளிநொச்சி, டிசெம்பர் 23

கிளிநொச்சியில் நேற்று முன் தினம் இரவு முதல் பெய்து வரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன.

கிராமங்கள் பல வெள்ளத்தில் மூழ்கியமையால் மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரிமுகாம்களில் தங்கியுள்ளனர். பக்கம் 11



## ஏ–9 வீதியில் வெள்ளம்



கிளிநொச்சி, டிசெ. 23

மாங்குளம் ஏ-9 வீதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 55 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. ஏ-9 வீதியூடான போக்குவரத்தும் சில மணிநேரம் பாதிப்படைந்தது. பக்கம் 11

## 2,788 குடும்பங்களைச் சேர்ந்த 9,161 பேர் வடக்கில் வெள்ள இடரினால் கடும் பாதிப்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கில் கடந்த 48 மணி நேரமாக நீடிக்கும் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள இடரால் 2 ஆயிரத்து 788 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 161 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் பக்கம் 11

## இடர் பாதித்த மக்களுக்கு துரித நிவாரணப் பணிகள்

### கிளிநொச்சி மாவட்ட செயலர் தெரிவிப்பு



கிளிநொச்சி, டிசெ. 23

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள வெள்ள இடரை எதிர்கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்றுக் காலை பணித் பக்கம் 02

## எதிர்க்கட்சிச் செயலகம் சம்பந்தனின் கைக்குள்!

### இக்கட்டான நிலையில் மஹிந்த

கொழும்பு, டிசெ. 23

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான இழுபறிக்கு இன்னமும் முடிவு காணப்படாத நிலையில், பக்கம் 11

## வான்பாயும் இரணைமடு



கிளிநொச்சி, டிசெ. 23

கடுமையான மழை வீழ்ச்சியால் இரணைமடுக் குளத்துக்கு வரும் நீரின் அளவு உயர்ந்துள்ளது. அதனால் இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளதால் 11 வான்கதவு பக்கம் 11

## வடக்கில் ஒரே நாளில் 365 மி.மீ. மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கில் கடந்த 24 மணித்தியாலயங்களில் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் பக்கம் 11

## பிரதேச செயலகத்துக்குள் வெள்ளம் படகுகள் மூலம் அதிகாரிகள் மீட்பு!

கிளிநொச்சி, டிசெ. 23

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குள் திடீரென வெள்ளம் புகுந்தமையால் அங்கிருந்த உத்தியோகத்தர்கள் கடற்படையினரின் உதவியுடன் படகு மூலம் பக்கம் 11



## தொண்டமனாற்றிலும் வான் கதவுகள் திறப்பு

### மக்களுக்கு எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 23

அதிக நீர் வரத்து காரணமாக தொண்டைமனாறு – வல்லை கடல் நீரேரி வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. பக்கம் 02

## தீர்வுக்கான எமது போராட்டம் தடைகளைத் தகர்த்து தொடரும்

### மாவை எம்.பி. நேற்று அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 23

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகவே பக்கம் 11

## முல்லைத்தீவிலும் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் நேற்று அதிகாலை வரை பெய்த அடைமழை காரணமாக முல்லைத்தீவு பக்கம் 11

## வடமராட்சி கிழக்கிலும் மக்கள் இடம்பெயர்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 23

கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கனமழையினால் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச பக்கம் 11

## சம்பந்தனைக் காக்க மேற்குலகு களத்தில்

### சாடுகின்றது மஹிந்த அணி

கொழும்பு, டிசெ. 23

சம்பந்தனைப் பாதுகாப்பதற்காக புலம்பெயர் அமைப்புகளும், மேற்குலக நாடுகளும் பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir



# அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அமெ. – இந்தியா கூட்டாகக் களத்தில்!



இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின்போது, அமெரிக்காவும் இந்தியாவும் மிக நெருக்கமாக ஒருங்கிணைந்து செயற்பட்டன என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் பிரதி உதவிச் செயலர் டேவிட் ரான்ஸ் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய நாடுகளான இலங்கை மற்றும் மாலைதீவு ஆகியவற்றின் நெருக்கடிகள் தொடர்பாக, ஏ.என்.ஐ. செய்திச் சேவையினால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தின் நிகர பாதுகாப்பு வழங்குனராக இந்தியாவின் தோற்றத்தை ஆதரித்து வருகிறது அமெரிக்கா. இந்தியாவுடனான ஒருங்கிணைப்பு விரிவானது. அது வளர்ந்து வருகிறது.

சிறப்பாக, இலங்கை மற்றும் மாலைதீவு விவகாரங்களில், நாங்கள் இந்திய அரசுடன் மிகநெருக்கமாக ஒருங்கிணைந்திருக்கிறோம். வொசிங்டனிலும், புதுடில்லியிலும் உள்ள இந்திய அதிகாரிகளுடன் நான் தனிப்பட்ட முறையில் நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்கிறேன்.

எனவே நாங்கள், இந்த விவகாரங்களை எப்படி கூட்டாக அணுகுவது என்பதை உறுதி செய்வதில் மிகவும் கவனமாக, இருந்தோம் – என்றார்.(ஐ)

# காலக்கெடு விதித்து போராட்டத்தை நிறுத்தினர் மலையக இளைஞர்கள்

கொழும்பு, டிசெ. 23

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ஆயிரம்ரூபாவழங்கப்படவேண்டும்எனவலியுறுத்திமுன்னெடுக்கப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கடந்த ஐந்துநாட்களாகமலையகஇளைஞர்கள்மூவர்உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில்மலையகத்தில்பலபகுதிகளிலும்கவனவீர்ப்புஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று அணிதிரண்ட மலையக இளைஞர்கள், தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை தினச் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என விண்ணதிரக் கோமெழுப்பினர்.

எனினும், போராட்டத்தில் ஈடுபட்டுவந்த இளைஞர்களின் உடல்நிலை மோசமடைந்ததால் – நேற்று மதியம் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அவர்கள் சேர்க்கப்பட்டனர். இதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

எதிர்வரும் பொங்கல் பண்டிகைக் முன்னர் தமது கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்படும் என உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அறிவித்தனர்.(ஐ)

# மைத்திரியிடம் மன்னிப்பு கோருவாரா பொன்சேகா?

## ஜனாதிபதியின் நிபந்தனையால் மீண்டும் பெரும் பரபரப்பு!

கொழும்பு, டிசெ. 23

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகாவுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிபந்தனை விதித்துள்ளார் என அறியமுடிகின்றது.

தன்னைக் கடுமையாக விமர்சித்துவரும், சரத்பொன்சேகா பகிரங்க மாக மன்னிப்பு கோரும்–வரை தனது நிலைப்பாட்டை மாற்றப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறி வித்துள்ளார்.

சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும், பொன்சேகாவுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி போர்க்கொடி தூக்கியுள்ளார். இந்நிலையில், ஜனா திபதியை சமரசப்படுத்தும் முயற்சியில் ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

(ஐ)

# வவுனியாவிலும் வெள்ளம்



வவுனியா, டிசெ. 23

வவுனியாவில்பெய்து வரும்மழை காரணமாக 77 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேர் பாதிப்படைந்துள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த இரு தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக வவுனியா வடக்கில் லைக்கா கிராமத்தில் 36 குடும்பங்களும், பெரியமடுக் கிராமத்தில் 05 குடும்பங்களும், நைனாமடு கிராமத்தில் 11 குடும்பங்களும், மன்னகுளம் கிராமத்தில் 25 குடும்பங்களுமாக 77 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன், மழை காரணமாக நெடுங்கேணி, நாம்பன்குளம் உடைப்பெடுத்த நிலையில் இராணுவத்தின் உதவியுடன் உரைப்பை மூலம் உடைப்பு அடைக்கப்பட்டுள்ளது. கனகராயன்குளம் பகுதியில் உள்ள படுகாட்டுக்குளம் மற்றும் நெடுங்கேணி பகுதியில் உள்ள வண்ணாகுளம் என்பன வான் பாய்கின்றன எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-100)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் இன்று பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் ஒரு விடயத்தை ஆரம்பத்தில் குறிப்பிட்டார். தமிழ் அரசியல் கட்சிகள், இயக்கங்களின் பிரமுகர்கள்மக்களுடன்புத்தியால்பேசுகின்றார்கள். இதயத்தால்பேசவில்லை என்றார் அவர். இதயத்தால் மக்களுடன் பேசாத வரை மக்களையோ இலக்குகளையோ வெல்ல முடியாது என்றும் கூறிய அவர் இன்னொரு விடயத்தையும் குறிபபிட்டார்.

தான் நேசிக்கும் தமிழின் மீது சத்தியம் என்று கூறி அதனை அவர் குறிப்பிட்டாராயினும், இள வயதில் அவருடனும் அவரது கழகத்துடனும் மிக நெருக்கமாகவும் அங்கமாகவும் பழகியவன் என்ற முறையில் அவர் கூறியவை உண்மை என்பது எனக்குத் தெரியும்.

‘*‘நான் கடைசியாக யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட முன்னர் பொட்டுவிடம் (விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுள் ஒருவர்) ஒரு விடயத்தைக் கூறினேன். என்னிடம் வளர்ந்த பொடியன் என்ற உரிமையுடன் அதை அவரிடம் கூறினேன். ‘தம்பி! நீங்கள் இப்போது மக்களுடன் இதயத்தால் பேசவில்லை. புத்தியால் பேசத் தொடங்கி விட்டீர்கள். இது வெற்றியைத் தராது.’ என்றேன்.*” எனக் குறிப்பிட்டார் ஜெயராஜ்.

தமிழ்க்கூட்டமைப்பின்சார்பில் உரையாற்றிய வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி சயந்தன் ஓர் உண்மையைப் போட்டுடைத்தார்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பு உருவான பின்னணியை அவர் விவரித்தார். அது தமிழ்க் கட்சிகளுக்கும்புலிகளுக்கும் இடையில் காலத்தின் கட்டாயத்தால் எழுந்த ’டீல்’ என்று சொன்னார் அவர்.

“மேயர்கள் சிவபாலன், திருமதி யோகேஸ்வரன், தங்கத்துரை, நீலன் திருச்செல்வம் என மிதவாத அரசியல்தலைவர்கள்–தமிழர்விடுதலைக்கூடடணியின்பிரமுகர்கள் –அடுத்தடுத்துக்கொல்லப்பட்டனர். ஜனநாயக அரசியலில் ஈடுபடுவோர் கொலை அச்சத்திலிருந்து விடுபட வேண்டிய கட்டாயம் இருந்தது.

*“அதேசமயம், சர்வதேசத் தரப்புகளினால் வன்முறையாளர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட புலிகளுக்கு ஒரு ஜனநாயக முகம் தேவைப்பட்டது.*

*“காலத்தின் கட்டாயம் இந்த இரு தரப்புகளையும் அவர்களது தேவைகளின் நிமித்தம் ஒன்றிணைய வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வழி செய்தது.”* என்று ஒப்புக் கொண்டார் சயந்தன்.

அவரின்இந்தக்கருத்துவெளிப்பாட்டை சிலாகித்து, மெச்சிப் பாராட்டினார் ஜெயராஜ்.

*“சயந்தன் அவர்களே! இப்படி வெளிப்படையாக நீங்கள் பேசத் தொடங்கிவிட்டீர்கள் என்றால் அதன் அர்த்தம் நீங்கள் இதயத்தால் மக்களுடன் பேசத் தயாராகி விட்டீர்கள் என்பதுதான்.*

*“நீங்கள் இப்போது சொன்ன விடயம்தான் உண்மை என்பது மக்களுக்கும் தெரியும். ஆனால் அதனை நீங்கள் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு வெளிப்படுத்த முன் வந்திருப்பது நல்ல சமிக்ஞை; நல்ல ஆரம்பம்!”*

அரசியல்வாதிகள் இப்படி உண்மை பேசப் புறப்பட்டால் அதற்குப் பெயர் அரசியல அல்லவே....!

கூட்டத்தின் முடிவில் மேடைக்குத் தலைநீட்டிய சிவாஜிலிங்கம் கூட்டமைப்பு உருவாக்கத்துக்கு அடிப்படையாக் அமைந்த விடயம் டீல் என்ற என்பதை மறுத்துரைத்தார்.

- மின்னல்-

## தொண்டமனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று முன் தினமும் நேற்றும் பதிவான கடும் மழை வீழ்ச்சி காரணமாக தொண்டைமனாறு நீரேரியின்நீர்மட்டம்3.8அங்குலம் உயர்ந்துள்ளது. இதனால்நேற்று இந்த நீரேரியின் மூன்று வான் கதவுகள் யாழ்ப்பாண மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் திறந்து விடப்பட்டன.

இதனைஅண்மித்தஅக்கரைப் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடு வேண்டாம் என மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் தொண்டைமனாறு நீரேரியில் குளிப்பதற்கும் பொதுமக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வல்லைநீரேரியின்அருகிலுள்ள தாழ்நிலமக்கள்மழைகாலங்களில் வெள்ளப்பாதிப்புக்கு இலக்காகி வருகின்றனர். அச்சுவேலி, தொண்டமனாறுமற்றும்வடமராட்சி கிழக்கின் பல கிராமங்கள் வெள்ளப்பாதிப்பைஎதிர்கொள்கின்றன.

தற்போது பெய்யும் கனமழையையடுத்து நீரேரியின் கொள்ளளவு சடுதியாக அதிகரித்துள்ளது. ஏற்கனவே அச்சுவேலி – தொண்டமானாறு பிரதான வீதி முற்றாக நீரில்மூழ்கியுள்ளதுடன்,அச்சுவேலி கிராமங்கள் சில நீரில் மூழ்கின. தற்போதைய கன மழை யால் வடமராட்சி கிழக்கின் பல கிராமங்கள் நீரில் மூழ்கின. (ஐ)

## இடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார் எனக் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள இடர் நிலைமைகளை எதிர்கொள்வதற்கு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தயாராக உள்ளன. வெள்ளத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான முதலுதவிகள், சமைத்த உணவுகள் வழங்குவதற்கும் பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருட இறுதி என்ற அடிப்படையில் மாவட்ட செயலகத்தில் அதிகநிதி இருப்பில் இருப்பது இல்லை. ஆனாலும் எந்த நேரத்தில் இடரை எதிர்கொள்வதற்கு எவ்வளவு நிதியையும்பெற்றுக்கொள்ளும்நிலையில் இருக்கின்றோம்–என்றார்.

கிளிநொச்சியில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஏழு நலன்புரி நிலையங்களில் 229 குடும்பங்களைச் சேர்ந்து 858 பேர் தற்போது வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

இவர்கள் இரத்தினபுரம் பொது நோக்கு மண்டபம், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், பாரதிபுரம் மகா வித்தியாலம், இராமநாதபுரம் மாவடியம்மன் ஜெப ஆலயம், திருமுறுகண்டி இந்து வித்தியாலயம், உயதநகர் கிழக்கு பொது நோக்கு மண்டபம் ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர் என்று கரைச்சி பிரதேச செயலாளர் த. முகுந்தன் தெரிவித்தார்

கண்டாவளை பிரதேசத்தில் ஏழு முகாம்களில் 341 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 119 பேர் தங்கியுள்ளனர். முரசுமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தம்பிராசபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, குமாரசாமிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தர்மபுரம் பொதுநோக்குமண்டபம், தர்மபுரம் மேற்கு பரிலூர்த் தேவாலயம், பிரமந்தனாறு மவி. மயில்வாகனம் புரம் மவி போன்ற இடங்களில் தங்கியுள்ளனர் என்று கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் தெரிவித்தார். (ஐ)

# நீதியரசர்கள் நியமனத்துக்கான சிபார்சை நிராகரித்த மைத்திரி

## அடுத்த அரசியல் ஆட்டம் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 23

**மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, ஈ.ஏ.ஜி.ஆர். அமரசேகர ஆகியோரை உயர் நீதிமன்ற நீதியரசர்களாகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோவை நியமிக்கவும் அரசமைப்புச் சபை வழங்கிய பரிந்துரையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்மொழியப்பட்ட நான்கு நீதியரசர்களின் பெயர்களிலிருந்து இவர்கள் இருவரையும் உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கவும் மேல்நீதிமன்ற நீதிபதிகள் நால்வரிலிருந்து ஒருவரை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கவும் அரசமைப்புச் சபை கடந்த ஒக்ரோபர் 25 ஆம் திகதி ஒப்புதல் வழங்கியது.

இந்த நிலையில் ஒக்ரோபர் 26ஆம் திகதி இவர்களுக்கான நியமனம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அன்றிரவு மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்து ஜனாதிபதி அரசியல் ஆட்டத்தை ஆரம்பித்தார்.

தற்போது அது முடிவுக்கு வந்துள்ள நிலையில் நீதியரசர்கள் நியமனத்தில் ஜனாதிபதி தனது அடுத்த அரசியல் ஆட்டத்தை ஆரம்பித்துள்ளார் எனத் தெற்கு அரசியலில் குற்றஞ்சாட்டப்படுகிறது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், ஒக்ரோபர் 12ஆம் திகதி நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். புதிய பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் நளின் ஜெயலத் பெரேரா நியமிப்பட்டார்.

இந்த மாற்றங்களையடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர் குழாமில் வெற்றிடம் ஏற்பட்டது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தீபாலி விஜயசுந்தர, ஈ.ஏ.ஜி.ஆர். அமரசேகர, எஸ்.துரைராஜா மற்றும் குமுதினி விக்கிரமசிங்க ஆகியோரின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்புச் சபைக்கு முன்மொழிந்தார்.

இந்த நிலையில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் அரசமைப்புச் சபை கடந்த ஒக்ரோபர் 25ஆம் திகதி கூடியது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர்கள் தலதா அத்துக்கோரள, மஹிந்த சமரசிங்க, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிமல் ரட்னாயக்க ஆகியோரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளான கலாநிதி ஜயந்த தனபால, அகமட் ஜாவிட் யூசுப் மற்றும் சட்டத்துறை விரிவுரையாளர் நாகநாதன் செல்வக்குமரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

இதன்போது நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, அமரசேகர இருவரையும் உயர் நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்க அரசமைப்புச் சபை ஒப்புதல் வழங்கியது.

அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோவை நியமிக்கவும் அரசமைப்புச் சபை ஒப்புதல் வழங்கியது.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஏ.ஏ.ஹயாந் தொடுவ, அருண ரனசிங்க, குசல சரோஜினி வீரவர்த்தன ஆகியோரின் பெயர்களையும் ஜனாதிபதி பரிந்துரைத்திருந்தார். (ஐ)

# நாட்டை மீளக் கட்டியெழுப்ப புதிய ஜனாதிபதியே தேவை!

## மைத்திரியுடன் மல்லுக்கட்டுகிறார் வெல்கம



கொழும்பு, டிசெ. 23

நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்பவேண்டுமென்றால் புதியதொரு ஜனாதிபதியால் மாத்திரமே முடியுமென்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். ஆகையால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரைவாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும்.

– இவ்வாறு மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி அரசமைப்பை மீறியுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளமையால் ஜனாதிபதித் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அந்தவகையில் மக்களும் ஏனைய தேர்தலைக் காட்டிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே தற்போதைய சூழ்நிலையில் அவசியம் என்பதை உணர்ந்துள்ளார்கள்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் புதிய ஜனாதிபதி ஒருவரால் மாத்திரமே முடியும் – என்றார். (ஐ)

# அரசியல் குழப்பத்தால் சு.கவுக்கும் பாதிப்பாம்

கொழும்பு, டிசெ. 23

அரசியல் நெருக்கடியினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதுபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மத்திய வங்கி பிணைமுறி மோசடி போன்ற விடயங்கள் இடம்பெறாமல் இருந்திருந்தால் நாங்கள் தொடர்ந்து அந்த அரசைக் கொண்டு சென்றிருக்கலாம். என்றாலும் நாட்டை முன்னிலைப்படுத்தியே இவ்வாறான தீர்மானம் ஒன்றை மேற்கொண்டோம். இருந்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தவறுகளைத் திருத்திக்கொண்டு செல்ல நல்லதொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதனால் அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்ளாமல் நல்ல முறையில் ஆட்சியை கொண்டு செல்லுங்கள். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும் நாட்டை முன்னிலைப்படுத்தி அரசின் நல்ல விடயங்களை ஆதரிப்போம் – என்றார். (ஐ)

# 5 ஆவது நாளாக தொடர்ந்தது உண்ணாவிரதப் போராட்டம்

## தலைநகரில் எழுச்சிகொண்டது மலையகம்

கொழும்பு, டிசெ. 23

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மலையக இளைஞர்களால், கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.




இந்தப் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் மலையகத்திலும் பல பகுதிகளில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், களத்துக்கே வந்து பல இளைஞர்கள் நேசக்கரம் நீட்டி வரும் நிலையில், நேற்று கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அதேவேளை, உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் உடல்நிலை மோசமடைந்துவருகின்றது. எனினும், தீர்வு கிடைக்கும் வரை – தமது கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று இளைஞர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# புறக்கோட்டைப் போராட்டத்துக்கு நாலா புறங்களிலிருந்தும் ஆதரவு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை தினச்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி மலையக இளைஞர்களால், தலைநகரில் முன்னெடுக்கப்பட்டுவரும் உணவுதவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து – ஹப்புத்தளையில் பல இடங்களிலும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.



தங்கமலை, இதல்கஸ்ஹின்ன, போவை ஆகிய தோட்டங்களிலேயே இளைஞர்களின் பங்களிப்புடன் மேற்படி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கட்டாயம் வழங்கப்படவேண்டும் எனவும் இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அதேவேளை, புறக்கோட்டை போராட்டத்துக்கு ஆதரவுதெரிவித்து – மலையகத்தில் ஏனையப் பகுதிகளிலும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. (ஐ)

# விகாரைகளின் அபிவிருத்திக்கு மைத்திரி 19 கோடி ரூபா உதவி

நாட்டில் குறைந்த வசதிகளுடன் காணப்படும் 46 விகாரைகளின் அபிவிருத்திக்காக 19 கோடி 50 இலட்சம் நிதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார்.

பௌத்த புனருத நிதியத்தினால் விகாரைகளுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது அந்த விகாரைகளின் விகாராதிபதி தேரர்களிடம் ஜனாதிபதி காசோலைகளை வழங்கினார்.

ஜனாதிபதி எண்ணக்கருவில் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த புனருத நிதியத்தினால் 2016 ஆம் ஆண்டில் 11 கோடி 60 இலட்சம் ரூபாவும் 2017 ஆம் ஆண்டில் 16 கோடி 70 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முரணிலை நிலைப்பாடுகள்

**அண்மைக்கால அரசியல் நெருக்கடிகள், குளறுபடிகளுக்கு மத்தியில் முக்கியமான ஒரு விடயத்தை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கா சுட்டிக்காட்டியிருக்கின்றார்.**

**நாட்டின் அரசமைப்பை ஜனாதிபதியும், பிரதமரும் ஏனைய அரசுத் தரப்புகளும் தங்கள் விருப்பப்படி – தம்மிஷ்டப்படி – பந்தாடுகின்றன என்பதுதான் அது.**

***"ஒரு சமயம் அரசமைப்பை மீறி, இன்னொரு சமயம் நாடாளுமன்றத்தை மீறி, பிறிதொரு சமயம் நீதிமன்றத்தை மீறி தமது அரசியல் சூழ்ச்சிகளை ஜனாதிபதி முன்னொடுத்தமையை நாம் அவதானிக்க முடிந்தது – என்று சுட்டிக்காட்டுகின்றார்.***

***"அதேபோலவே தாம் பிரதமராகப் பதவியில் இல்லாத போதும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளியை ரணில் விக்கிரமசிங்க ஐம்பத்தியொரு நாள்கள் ஆக்கிரமித்து வைத்திருந்தமை அதிகாரத் துஷ்பிரயோகம் தான்"*** **என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.**

**அரசமைப்பின்படி தனியான கட்சி ஒன்று அரசை அமைக்கும்போது நியமிக்கப்படக் கூடிய அமைச்சர்களின் எண்ணிக்கை முப்பதுதான். இதனை அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது. இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராகத் தலைமை வகித்த அரசுதான் அந்த அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது.**

**அப்படியிருக்கும்போது இப்போது புதிய அமைச்சரவை நியமனத்துக்கு 35 பேர் பட்டியலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏன் அனுபபினார்? அரசமைப்பு வரையறை செய்த அமைச்சர்களின் எண்ணிக்கையை மீறி அமைச்சர்களை நியமிக்கும்படி பிரதமர் ஜனாதிபதியைத் தூண்டுகின்றாரா என்று கேள்வி எழுப்புகின்றார் அநுரகுமார திஸாநாயக்க.**

**தாங்களே முன்னின்று கொண்டு வந்த அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு 19 ஆவது திருத்தத்துக்கு மாறாக –**

**ஒருபுறம், தமக்கு இல்லாமல் போன அதிகாரத்தை முன்நிறுத்தி நாடாளுமன்றக் கலைக்கின்றார் ஜனாதிபதி.**

**மறுபுறம், வரையறுக்கப்பட்ட அமைச்சர்கள் எண்ணிக்கையை மீறி அதிகமானோரை நியமிக்கத் தூண்டுகின்றார் பிரதமர்.**

**இது, இப்படி என்று பார்த்தால் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபடி, எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு உரிமை கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முன்னுக்குப் பின் முரணாக, நடப்பதாக நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் அறிந்த சிலவடாரங்கள் விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றன.**

**அரசமைப்பு பதவி வழியாக அளித்த கடப்பாட்டின் பிரகாரம் அமைச்சரவைக்குத் தலைவர் ஜனாதிபதி. அதன் பிரகாரம் தற்போதைய ஐக்கிய தேசிய முன்னி அரசின் அமைச்சரவைக்கும் அதன் கூட்டங்களுக்கும் தலைமை வகிக்கும் அதிகாரம், அவரது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி வழியாக அவருக்கு வருகின்றது.**

**ஆனால், அவரோ அதையும் தாண்டி, மேலதிக அமைச்சுகள் சிலவற்றையும் பிடுங்கித் தம்முடன் வைத்துக் கொண்டுள்ளார்.**

**அப்படி அவர் அமைச்சுக்களை வைத்திருப்பதால் அவரும் தற்போதைய அரசின் பங்காளியாகிவிடுகின்றார்.**

**இன்றைய நிலையில் அவரேதான் சு.கவுக்கும் சு.க. உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் தலைவர். இந்த இரண்டினதும் தலைவரான அவர் ஐக்கிய தேசிய முன்னணி அரசினதும் பங்காளராக இருக்கின்றார்.**

**அவர் அரசின் பங்காளியாகவும் அந்த அரசின் தலைவராகவும் விளங்குகையில், அவரது தலைமையின் கீழான சு.க. மற்றும் ஐ.ம.சு. கூட்டமைப்பு ஆகியவற்றின் அங்கத்தவரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி கொடுப்பது எங்ஙனம் நியாயம் என்பதுதான் தமிழ்க் கூட்டமைப்பு தற்போது முன்வைக்கும் பிரதான வாதம்.**

**அதாவது ஒரே கட்சியைச் சேர்ந்தவர் அரசின் பங்காளியாகவும் தலைவராகவும் இருக்கும் அதேசமயத்தில் மறுபுறம் அதே கட்சியைச் சேர்ந்த இன்னொருவர் எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட முடியுமா என்பதே அந்தக் கேள்வி.**

**சரி. அதைத் தவறு என வைத்துக் கொள்வோம்.**

**நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மையைப் பெறாமல் ஆக 103 எம்.பிக்களைக் கொண்டிருந்த ஐ.தே. முன்னணித் தரப்பு அறுதிப் பெரும்பான்மையான 113 என்ற எண்ணிக்கையை எட்டிப் பிடிப்பதற்கு முண்டு கொடுத்தது தமிழ்க் கூட்டமைப்புத்தான். தமிழ்க் கூட்டமைப்பு அரசில் சேராமல் இருக்கலாம். அரசுப் பங்காளியாகாமல் இருக்கலாம். ஆனால் கூட்டமைப்பின் 14 எம்.பிக்களும் கொடுத்த ஆதரவில்தான் இந்த அரசு அதிகாரத்துக்கே வந்தது. ஆட்சியில் தொடருகின்றது.**

**அப்படியாயின், ஒருபுறம் ஆளும் தரப்புக்குத் தேவையான பெரும்பான்மையை பெற்றுக் கொடுப்பதற்கு அதனோடு அணி சேர்ந்து, அதற்கு முண்டு கொடுதது நின்றபடி, மறுபுறம் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குக் கூட்டமைப்பு உரிமை கோரலாமா?**

**இது கூட்டமைப்பின் முரணிலைப் போக்கு அல்லவா என்று அந்த நாடாளுமன்ற வட்டாரங்கள் சுட்டிக் காட்டி வினாவெழுப்புவதிலும் சில நியாப்பாடுகள் உள்ளன என்றே தோன்றுகின்றது.**

**அரசின் தேவைகளுக்கும் நலன்களுக்குமாக ஒவ்வொரு தரப்பும் தமது விருப்புக்கும் வசதிக்கும் ஏற்ப அரசமைப்பையும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் வளைக்க முற்படுகின்றன என்பதுதான் நிலைமை போலும்.**

# ரணிலின் அமைச்சுக்களுக்கு செயலாளராக சிவஞானசோதி

கொழும்பு, டிசெ. 23

இலங்கை நிர்வாக சேவை அதிகாரி வீ.சிவஞானசோதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் வரும் முக்கிய அமைச்சுக்களான தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சுகளுக்குச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டு அரசில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளராக ஆரம்ப காலத்தில் வீ.சிவஞானசோதி கடமையாற்றினார். எனினும் அந்தத் துறைகளின் அமைச்சராகவிருந்த டி.எம்.சுவாமிநாதன், செயலாளர் சிவஞானசோதியுடன் முரண்பட்டு அவரைத் தனது அமைச்சிலிருந்து அகற்றினார்.

பின்னர் ஜனாதிபதியின் கீழ் இருந்த நல்லிணக்க அமைச்சின் செயலாளராக சிவஞானசோதி கடமையாற்றினார். அந்த அமைச்சு மனோ கணேசனுக்கு மாற்றப்பட்ட பின்னர் அவர் அதே அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றினார்.

நல்லிணக்க அமைச்சின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு மாகாணத்துக்குக் கிடைப்பதற்கும் அவை உடன் நிறைவேற்றப்படுவதற்கும் சிவஞானசோதி பெரும்பங்காற்றியவர்.

மைத்திரி – மஹிந்த அமைச்சரவையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கீழான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளராக வீ.சிவஞானசோதி நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போது ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சரவையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வசமுள்ள முக்கிய அமைச்சுக்களான தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சுகளுக்கு வீ.சிவஞானசோதி செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள் நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டனர்.

ஹேமசிறி பெர்னாண்டோ - பாதுகாப்பு அமைச்சு

திருமதி எஸ்.எம்.மொஹமட் - தபால் சேவைகள், முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு

வீ.சிவஞானசோதி - தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

பத்மசிறி ஜயமான்ன - கல்வி அமைச்சு

ஆர்.எம்.டி.பி. மீகஸ்முல்ல - நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

ஜே.ஜே.ரத்னசிறி - பொதுநிர்வாக, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

கலாநிதி பி.எம்.எஸ்.படகொட - மின்சக்தி, சக்தி வலு மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சு

எல்.பீ.ஜயம்பதி - போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சு

என்.ரூபசிங்க - பெருநகரங்கள், மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

எச்.ட.கமல் பத்மசிறி - உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

ஜே.ஏ.ரஞ்சித் - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ஏ.பீ.ஜீ.கீத்சிறி - புத்தசாசனம் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

எல்.டி.சேனாநாயக்க - மகளிர், சிறுவர் அலுவல்கள், உலர் வலய அபிவிருத்தி அமைச்சு

டி.எம்.ஏ.ஆர்.பி.திசாநாயக்க - மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சு

பீ.சுரேஷ் - மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

எச்.எம்.காமினி செனவிரத்ன - தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

கே.டி.என்.ஆர்.அசோக - கைத்தொழில், வாணிப அலுவல்கள் நீண்டகாலமாக இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

கே.டி.எஸ்.ருவன்சந்ர - விவசாயம், கிராமிய பொருளாதாரம், பண்ணை வள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு

ரவிந்திர ஹேவாவிதாரண - அரச தொழில் முயற்சி, கண்டிய மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சு

டபிள்யு. எச்.கருணாரத்ன - காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு.

எம்.வை.எஸ்.தேசப்பிரிய - தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு

கே.பீ.பேர்னாட் வசந்த சில்வா - வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

எஸ்.ட.கொடிகார - அபிவிருத்தி மூலோபாயங்கள், சர்வதேச வர்த்தகம், விஞ்ஞான, தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சு

டபிள்யு.ஏ.சூலானந்த பெரேரா - தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு

வசந்தா பெரேரா - சுகாதார, போசணை, சுதேச மருத்துவத் துறை அமைச்சு

எம்.எம்.பீ கே. மாயாதுன்னே - நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு

சிறி ஹெட்டிகே - சுற்றுலா அபிவிருத்தி, வன ஜீவராசிகள், கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

ஆர்.பீ.ஆரியசிங்க - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

பராக்கிரம திஸாநாயக்க - துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு

சுனில் ஹெட்டியாரச்சி - நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு.

(ஐ)

# பாதுகாப்பு அமைச்சுக்கு ஆயிரத்து 124 கோடி ரூபா

கொழும்பு, டிசெ. 23

2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலுமான முதல் காலாண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையை நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இது குறித்து விவாதம் இடம்பெற்றதுடன் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு 102 வாக்குகளைப் பெற்று 96 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இந்த இடைக்கால கணக்கறிக்கையில், அடுத்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்காக 1765 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சேவைகளுக்காக 790 பில்லியன் ரூபாவும், திரட்டு நிதியத்துக்காக 970 பில்லியன் ரூபாவும், முற்பணங்களுக்காக 5 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் 990 பில்லியன் கடன் பெறவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முதல் காலாண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், பாதுகாப்பு அமைச்சுக்காக 1124 கோடி 63 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி செயலகத்துக்கு 439 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், பிரதமர் அலுவலகத்துக்கு 50 கோடியே 39 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப் பட்டுள்ளது. (ஐ)

## நாளை

24.12.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம்: புனர்பூசம் மு.இ 9.48 வரை
திதி : துதியை மு.இ 8.18 வரை
சுபநேரம் : 12.26 – 1.56 வரை
இராகுகாலம் : 7.56 – 9.26 வரை

# மு.காவுடன் இணைந்து தேசிய அரசு; சட்ட ஆலோசனை கேட்கிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து தேசிய அரசு அமைக்க முடியுமா என்பது தொடர்பில் சட்டமா அதிபரிடம், சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின்தேசிய அமைப்பாளரான பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம், தனியாட்சி அமையும் பட்சத்தில் அமைச்சரவையில் 30 அமைச்சர்களையே நியமிக்க முடியும் என்பதால், ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த பலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய அரசு அமையும் பட்சத்தில் அமைச்சரவை எண்ணிக்கையை 45 ஆக அதிகரிக்கமுடியும். நாடாளுமன்றத்திலுள்ள பிரதான இருகட்சிகளும் இணைய வேண்டும். அதற்கான சாத்தியம் இல்லை. எனவேதான் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றுமொரு கட்சியான முஸ்லிம்காங்கிரஸுடன்இணைந்து தேசியக் அரசமைக்க முடியுமா என ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஈ.பி.டி.பி ஆகிய நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் ,அரசில் இணையப்போவதில்லை என்று அறிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்கக் கடற்படையின் கப்பலும் கொழும்பு வந்தது



கொழும்பு, டிசெ. 23

ரஷ்யக் கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்திருக்கும் நிலையில், அமெரிக்காவின் தரையிறக்கக் கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

13 ஆவது கடல் விரைவு அணியைச் சேர்ந்த யு.எஸ்.எஸ். ரஷ்மோர் என்ற தரையிறக்க கப்பலே ஆறு நாள்கள் பயணமாகக் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

கொமாண்டர் றொபேர்ட் ட்ரயனை கட்டளை அதிகாரியாகக் கொண்ட, 185 மீற்றர் நீளமான இந்தக் கப்பலில், 380 அதிகாரிகள் மற்றும் கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் தரித்திருக்கும் என்றும், இதன் போது இரு நாடுகளின் கடற்படையினரும் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க – இலங்கைக் கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# டிப்பர்கள் நேருக்கு நேர் மோதல்



யாழ்ப்பாணம், டிசெ. 23

நாவற்குழியில் இரண்டு டிப்பர் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி, வயல்களுக்குள் குடைசாய்ந்த விபத்தில் படுகாயமடைந்த வாகனச் சாரதிகள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழி - கேரதீவு ஏ-32வீதியில் மறவன்புலோ ஆலடிச் சந்தியை அண்மித்த பகுதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வன்னிப்பகுதியிலிருந்து கருங்கற்கள் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனமும், நாவற்குழியிலிருந்து சென்ற டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின. காயமடைந்த வாகனச் சாரதிகள் அவ்வழியே வந்த நோயாளர்காவுவண்டியின் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளிலேயே தேர்தல்

## அமைச்சர் வஜிர தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 23

9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தாமதமின்றித் தேர்தல் நடத்தப்படும் என்று உள்நாட்டு நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சில் நேற்று முன்தினம் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட பின்னர் அமைச்சர் ஊடகங்களிடம் இந்த தகவலை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் பொதுச்சொத்துக்கள் விரயம் செய்யப்பட்டு மாகாணசபைத் தேர்தல்கள் தனித்தனியே நடத்தப்பட்டன.

எனினும் அந்த முறையை மாற்றி இந்த அரசு 9 மாகாண சபை தேர்தல்களையும் ஒருங்கே நடத்தவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள்

## சபையில் அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 23

அடுத்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அந்தப் பகுதி மக்களின் தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள நடவடிக்கை வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கணக்கறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அரசியல் குழப்ப நிலையால் நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் தற்போது எதிர்க்கட்சிக்குச் சென்று பதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். 2007ஆம் ஆண்டு முதல் அதிகளவான நிதிகளை வெளிநாடுகளிலிருந்து கடன்களாகப் பெற்றுக்கொள்ளும் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியே இந்நிலைக்கு காரணமாகும் - என்றார். (ஐ)

# கிரிக்கெட் ஊழல் மோசடி இலங்கைக்கே முதலிடம்

## இதனை மாற்றுவேன் என்கின்றார் ஹரின்



கொழும்பு, டிசெ. 23

கிரிக்கெட்டில் ஊழல் மோசடி மிக்க நாடுகளில் நமது நாடு தான் முதலிடத்தில் இருக்கின்றது. இது வெட்கத்துக்குரியதாகும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியை பொறுப்பேற்ற பின்னர் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

எனவே இலங்கை கிரிக்கெட் துறையில் நிலவும் மோசடிகளைக் களைந்து தூய சிந்தையோடு கிரிக்கெட் வளர்ச்சிக்கு சேவையாற்றுபவர்களைத் தேர்ந்தெடுக்கும்வரை இடைக்கால நிர்வாக சபை ஒன்றை கிரிக்கெட் சபைக்கு நியமிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றேன் – என்றார். (ஐ)

# சர்வதேச நீதிமன்றில் இலங்கை; மனுவை நிராகரித்தது பிரிட்டன்

இலங்கையைக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னிறுத்துமாறு கோரி, சுமார் 11 ஆயிரம் பேர் கையொப்பம் இட்டு சமர்ப்பிக்கப்பட்ட இணைய விண்ணப்பத்தைப் பிரிட்டன் நிராகரித்துள்ளது.

இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில், ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாவிடின் இலங்கையை குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னிறுத்துமாறு கோரி, சுமார் 11ஆயிரம் பேர் கையொப்பம் இட்டு இணைய விண்ணப்பம் ஒன்று பிரிட்டன் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

எனினும் இதற்கு மறுப்பு வெளியிட்டுள்ள பிரிட்டன் அரசின் வெளியுறவுத்துறை அமைச்சு, பிரிட்டன் வெளியுறவுக் கொள்கையின்படி சர்வதேச குற்றவியல் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் பொறுப்புக்கூறல், உண்மையைக் கண்டறிதல், நீதியை நிலைநாட்டல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் காண்பதற்கே, பிரிட்டன் விரும்புகிறது என்று பிரிட்டன் அரசு பதில் அளித்துள்ளது.

இலங்கை அரசு அனைத்து சமூகங்களின் உதவியுடன் மேற்கொண்டுவரும் தேசிய நடைமுறைகளே சிறந்தவை என்று தாம் நம்புவதாகவும் பிரிட்டன் அரசு குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசு, மனித உரிமைகளை நிலைநாட்ட எடுத்துள்ள முயற்சிகளை ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வரவேற்றுள்ளமையையும் பிரிட்டன் அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கையின் உறுதிப்பாட்டுக்காக தமது அரசு 8.3 மில்லியன் பவுண்ட்ஸ்களை வழங்கியுள்ளதாகவும் பிரிட்டன் வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

STUDY @ DENMARK GERMANY CANADA
No. 1 Colleges & Universities in
G.C.E. O/L தகமையுடன் விண்ணப்பிக்கலாம்
குடியுரிமை பெறுவதற்கான இலவச ஆலோசனையும் ஆவணங்கள் தயார்படுத்தலும்
குறைந்த கட்டண வசதி
FREE IELTS Classes
BANK Balance வசதி செய்து தரப்படும்
Denimark, Germany போன்ற நாடுகளுக்கு குடும்பத்தோடு குடிபுகுவதற்கு தேவையான ஆவணங்கள் செய்துதரப்படும்.

ASPS
389-1/2, Galle Road, Colombo 06
22, Sri Mahabodhi Road, Dehiwala
077 33 47 332

காலைக்கதிர் Kalaikkathir



# சகல கணினிகளையும் இடைமறித்து ஊடுருவும் அதிகாரத்தை கையில் எடுத்தது இந்திய அரசு!

## ஒத்துழைக்க மறுத்தால் ஏழு ஆண்டுகள் வரை சிறை

இந்தியாவில் உள்ள அனைத்துக்கணினிகளையும் மத்திய அரசு தனது கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்துள்ளது. அரசின் 10 விசாரணை அமைப்புகளுக்கு ஒத்துழைக்க மறுப்பவர்களுக்கு 7 ஆண்டு சிறையும், அபராதமும் விதிக்கப்படும்.

நாட்டில் உள்ள அனைத்து கணினிகளில் பாதுகாத்து வைத்திருக்கும் தகவல்கள், பரிமாறப்படும் தகவல்களைக் கண்காணிப்பது, அனுப்பும் தகவல்களைக் கண்காணிப்பது, அந்தத் தகவல்களை இடைமறித்து ஆய்வு செய்வது, தடைசெய்வது, தகவலின் உண்மைத்தன்மையை ஆராய்வது உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் செய்ய மத்திய அரசின் 10 விசாரணை முகமைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அதிகாரம் அளித்துள்ளது.



அதன்படி, உளவுத்துறை (ஐ.பி), போதை மருந்து கடத்தல் தடுப்புப் பிரிவு (என்.சி.பி), அமலாக்கப்பிரிவு (ஈ.டி), மத்திய நேரடிவரிகள் வாரியம் (சி.பி.டி.டி.), வருவாய் புலனாய்வு (டி.ஆர்.ஐ.), சி.பி.ஐ., தேசிய புலனாய்வு அமைப்பு, டெல்லி பொலிஸ் ஆணையர் அலுவலகம் (என்.ஐ.ஏ) ஆகியவை உட்பட பத்து அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, இந்த 10 விசாரணை முகமைக்குத் தேவை ஏற்படும் நேரத்தில் எந்தத் தகவல் தொடர்புசேவை வழங்குவோர், அல்லது பயன்பாட்டாளர் அல்லது கணினி மையத்தின் பொறுப்பாளர் உதவ வேண்டும். அனைத்து விதமான தகவல் தொடர்பான வசதிகளையும் அளிக்க வேண்டும். அவ்வாறு ஒத்துழைக்கத் தவறினால், அவர்களுக்கு 7 ஆண்டுவரை கடுங்காவல் சிறையும், அபராதமும் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பச் சட்டம் பிரிவு 69(1) இன்படி, இந்த அதிகாரத்தை 10 விசாரணை முகமைகளுக்கு வழங்கியுள்ளது. நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்தல், பாதுகாப்புத்துறை ரகசியத்தைப் பாதுகாத்தல், மாநிலத்தின் பாதுகாப்பு, வெளிநாடுகளுடன் நட்புறவு உள்ளிட்டவற்றைப் பேணுவதற்காக இந்த 10 முகமைகளுக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(உ)

# நடுக்கடலில் ஒரு பக்கத்துக்கு சாய்ந்த எண்ணெய்க் கிணறு!

## 'பெய்ட்டி' புயலின் கைவரிசை



ஆந்திராவில் அண்மையில் வீசிய 'பெய்ட்டி' புயலினால் நடுக்கடலில் இருந்த எண்ணெய்க் கிணறு ஒன்று ஒருபக்கமாகச் சாய்ந்தது. அதனை நேர் செய்ய இந்தியக் கடற்படை பணிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடற்படையின் செய்தித் தொடர்பாளர் தன் ட்விட்டரில், ஒலிந்தா ஸ்டார் என்ற எரிவாயுக் கிணறு கிருஷ்ணா கோதாவரி கடற்படுக்கையில் நடுக்கடலில் ஒரு பக்கமாகச் சாய்ந்து கடலில் லேசாக மூழ்கியது. பெய்ட்டி புயல் உருவானதையடுத்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையினால் அங்கு பணியாற்றியவர்கள் கரை திரும்பியிருந்தனர். ஒலிந்தா ஸ்டார் அதன் பிறகு ஒருபக்கமாகச் சாய்ந்திருந்தது. இது பெய்ட்டி புயலினால் இருக்கலாம், கொஞ்சம் சேதமும் ஏற்பட்டுள்ளது என்று பதிவிட்டுள்ளார்.

இந்தக் கிணறு வங்காளவிரிகுடாவில் காக்கிநாடா, ஏனாம் இடையே நடுக்கடலில் உள்ளது. வங்கக்கடலில் ஹைட் ரோகார்பன் எடுப்பதற்கான 'ஒலிந்தா ஸ்டார்' என்ற இந்தக் கிணற்றை நிறுவியவர்கள் பிரேசில் நிறுவனத்தினர். அந்த நிறுவனம்தான் இதனை நடத்தி, செயல்படுத்தி, பராமரித்தும் வருகிறது. இதில் சுமார் 120 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆனால் கடந்த வாரம் கடும் புயல் எச்சரிக்கையினால் இந்த எண்ணெய்க் கிணறு நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு அனைவரும் கரைக்குத் திரும்பியிருந்தனர். ஆனால் பெய்ட்டி புயலுக்குப் பிறகு அதிகாரிகள் கிணறு சாய்ந்திருந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர், பிறகு அதைச் சரிசெய்யுமாறு அறிவுறுத்தினர்.

பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. கிணற்றின் செயல்பாடுகள் இன்னும் ஓரிரு நாள்களில் தொடங்கி விடும் என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பிரசாதத்தில் விஷம் கலந்த கொடூரம்: 4 தமிழர்கள் உட்பட ஏழு பேர் கைது!

கர்நாடகாவில் விஷம் கலந்த பிரசாதத்தை சாப்பிட்ட 15 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக தமிழகத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 7 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கர்நாடகா மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டம் சுல்வாடி கிராமத்தில் கிச்சுகட்டி மாரம்மா கோயில் உள்ளது. தமிழக எல்லையில் அமைந்துள்ள இந்தக் கோயிலை நிர்வகிக்கும் அறக்கட்டளையை கைப்பற்ற சின்னப்பி என்பவருக்கும், மேலாளர் மாதோவுக்கும் இடையே நீண்ட காலமாக போட்டி நிலவி வருகிறது.

இந்நிலையில், இந்தக் கோயிலில் கோபுரம் அமைக்கும் பணியை முன்னிட்டு, கடந்த 15 ஆம் திகதி பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதனைச் சாப்பிட்ட 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பலருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. அவர்களுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக வழக்கு பதிவு செய்த பொலிஸார், அறக்கட்டளை நிர்வாகிகள் சின்னப்பி, அவரது மகன் லோகேஷ், மேலாளர் மாதோ, சமையலர் புட்டசாமி உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தினர்.



இதில், கோயில் மேலாளர் மாதோ, அவரது மனைவி அம்பிகா, கோயில் பூசாரி இம்மடி மகாதேவசாமி ஆகிய 3 பேரும் சின்னப்பி தரப்புக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக இந்தச் செயலில் ஈடுபட்டமை தெரியவந்தது. மேலும், மற்றொரு பூசாரி தொட்டய்யா என்பவர் மூலமாக பிரசாதத்தில் விஷம் கலந்ததையும் அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

இதன்பேரில், மேற்குறிப்பிட்ட 4 பேர் உட்பட 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களில், தொட்டய்யா, மாதோ உள்ளிட்ட 4 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

# தெலுங்கானா மாநிலத்தை வாட்டுகின்றது கடும் குளிர்

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் கடும் குளிர் வாட்டி எடுக்கிறது. இதன் காரணமாக 26 பேர் உயிரிழந்துள்ளனர்.



தெலுங்கானா மாநிலத்தில் கடந்த 4 நாள்களாக இரவு நேர வெப்பநிலை 12 பாகை அளவுக்கு குறைந்துள்ளது. இதனால் குறிப்பாக குழந்தைகள், முதியோர் மற்றும் ஆஸ்துமா நோயாளிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குளிர் காரணமாக கடந்த 4 நாள்களில் மட்டும் ஹைதராபாத், கரீம் நகர், வாரங்கல், மேதக், ரங்காரெட்டி ஆகிய மாவட்டங்களில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது தெலுங்கானா மாநிலத்தில் மாலை 5 மணி முதலே குளிர் காற்று வீசத் தொடங்கி விடுகிறது. பின்னர் இரவு கடும் குளிர் வாட்டுகிறது. அதிகாலையில் பனி பெய்வதால், வாகன சாரதிகளும் வாகனங்களைச் செலுத்த மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதனால், தெலுங்கானாவில் சமீபகாலமாக சாலை விபத்துகளும் அதிகரித்துள்ளன எனக் கூறப்படுகிறது. காலை நேரங்களில் 9 மணி வரை குளிர் காற்று வீசி வருவதால், சாலையில் மக்கள் நடமாட்டம் குறைவாக உள்ளது.

# அமெ., கனடா நாட்டவரை ஏமாற்றும் இந்திய போலி 'கோல் சென்டர்கள்'!

நொய்டா, டிசெ.23

அமெரிக்கர்களிடம் பேசி மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் போலி 'கோல் சென்டரில்' (அழைப்பு மையங்களில்) பணியாற்றிய 126 பேர் கைது செய்யப்பட்டனர்.

உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள 63ஆவது செக்டார் பகுதியில் இயங்கிவந்த ஒரு கோல் சென்டரில் சில மோசடிச் செயல்கள் நடக்கின்றன எனப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன்பேரில் அவர்கள் வியாழனன்று இரவில் அங்கு சென்று சோதனை நடத்தினார்கள்.

அங்கு பணிபுரிந்த தொலைபேசி இயக்குநர்கள் உட்பட 126 ஊழியர்களையும் அழைத்து வந்து தீவிர விசாரணை நடத்தினார்கள்.

அப்போது அவர்கள், அமெரிக்காவில் உள்ள மக்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவார்கள், அவர்களுக்கு அங்கு 9 இலக்க சமூக பாதுகாப்பு எண் வழங்கப்பட்டுள்ளது, அந்த எண்ணில் பிரச்சினை இருப்பதாக அவர்களிடம் தெரிவித்து, அதனை சரிசெய்வதாகக் கூறி பணம் பெற்றுவந்தமை தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று 126 பேரையும் கைது செய்தனர்.



நொய்டாவில் கடந்த சில மாதங்களில் மட்டும் சுமார் ஒரு டசின் போலி கோல் சென்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ஏராளமான ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அமெரிக்கர்கள், கனடா நாட்டினர் உள்பட பல வெளிநாட்டு மக்களை இதேபோல ஏமாற்றி மோசடி செய்து வந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அமெரிக்க அரசுத் துறைகள் இன்று காலையுடன் முடங்கும்?

## நிதிப் பிரேரணை நிறைவேறாமையால் சிக்கல்

அமெரிக்க அரசின் நிதிச் செலவினப் பிரேரணைக்கும், அதிபர் ட்ரம்பின் கோரிக்கைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து எந்தவித மானநிதிப்பிரேரணையையும்நிறைவேற்றாமல் செனட் அவை நேற்று ஒத்திவைக்கப்பட்டது. இதனால் அமெரிக்காவில் இன்று காலை 'ட் டவுன்' தொடங்குகிறது.

இதனால், அரசின் செலவினங்களுக்கு நிதி இல்லாமல் நாட்டில் அனைத்து துறைகளும் முடங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலைக்கு வரமாட்டார்கள், அல்லது அவர்கள் ஊதியம் இல்லாமல் பணியாற்ற வேண்டியது இருக்கும். கிறிஸ்துமஸ் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், 'ட் டவுன்' ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ட் டவுன் நிகழ்வு என்பது, அமெரிக்க மத்திய அரசுக்கு கட்டுப்பட்ட சேவைகள் அனைத்துக்கும் ஊதியம் அளிக்க பணம் இல்லாமல் நிறுத்திவைக்கப்படும். அத்தியாவசிய பணிகளான பொலிஸ், ராணுவம் தவிர அனைத்தும் முடங்கும்.

கடந்த 2013 ஆம் ஆண்டுக்கு பின் இப்போது மீண்டும் ட்டவுன் 4ஆவது முறையாக ஏற்பட உள்ளது. அதிபர் ட்ரம்ப் பதவி ஏற்று 2 ஆவது முறையாக 'ட் டவுன்' நடக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோ - அமெரிக்க எல்லையில் சுவர் எழுப்ப 500 கோடி டொலர் நிதி கேட்டு அதிபர் ட்ரம்ப் கோரிக்கை விடுத்தார். ஆனால், இதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், நிதி செலவினத்துக்கான பிரேரணையை நிறைவேற்றாமல் செனட் அவை நேற்று ஒத்திவைக்கப்பட்டது. அதேசமயம், குடியரசுக் கட்சியினர் அதிகம் கொண்ட பிரதிநிதிகள் சபையில் செலவினப் பிரேரணைக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

இதற்கிடையே வெள்ளை மாளிகையில் ஜனநாயகக் கட்சியின் எம்.பி.க்களும், குடியரசுக் கட்சியின் எம்.பி.க்களும் பேச்சு நடத்தனார்கள் அதில் எந்தவித மான உடன்பாடும் ஏற்படவில்லை எனத் தெரிகிறது. இதையடுத்து சனிக்கிழமை இரவு 12.01 மணியில் இருந்து 'ட் டவுன்' அதிகாரபூர்வமாகத் தொடங்கும்.

ஒருவேளை இந்த 'ட் டவுன்' தொடங்கினால் எத்தனை நாள்கள் அமெரிக்காவில் நீடிக்கும் என்று தெளிவாகத் தெரியாது. ஆனால், 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேறு வழியின்றி ஊதியம் இல்லாமல் பணியாற்ற வேண்டிய சூழல் கிறிஸ்துமஸ் நேரத்தில் ஏற்படும்.

கடந்த 3 காலாண்டுகளாக இராணுவம், சுகாதாரம் உள்ளிட்டவற்றுக்கு 2019ஆம் ஆண்டு செப்டம்பர் வரை முழுமையாக நிதி ஒதுக்கப்பட்டுவிட்ட நிலையில், 25 சதவீதம் மட்டுமே நிதி ஒதுக்காமல் இருக்கிறது.

இந்த 'ட் டவுன்' நடவடிக்கையால், நாசா ஊழியர்கள், வர்த்தக துறை அதிகாரிகள், உள்துறை, நீதித்துறை, வேளாண்மை மற்றும் மாநில அரசு ஊழியர்கள் பெரும்பாலும் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள். அதேசமயம், நாட்டில் உள்ள தேசிய பூங்காக்கள் அனைத்தும் திறந்திருக்கும். ஆனால், ஊழியர்கள் மட்டும் பணிக்கு வரமாட்டார்கள்.

இது குறித்து அதிபர் ட்ரம்ப் கூறுகையில், அமெரிக்காவில் இன்று இரவு 'ட் டவுன்' வருவது என்பது ஜனநாயகக் கட்சி எம்.பி.க்களைப் பொறுத்தது. இந்த பிரச்சினைக்கு குடியரசுக் கட்சியினர் ஒருவரும் காரணமல்லர். நாங்கள் எந்த காரணம் கொண்டும் 'ட் டவுனுக்கு' ஆதரவில்லை. அதேசமயம், நீண்டகால 'ட் டவுன்' நடந்தால், அதற்கும் தயாராக இருக்கிறோம். இந்த 'ட் டவுனை' நாட்டின் எல்லையைப் பாதுகாப்பதற்காக நடத்துவதில் பெருமை கொள்கிறேன். இந்த நாட்டு மக்கள் கிரிமினல்கள் நாட்டுக்குள் வருவதை விரும்பவில்லை. மெக்சிக் கோவில் இருந்து வரும்அகதிகள்ஏராளமானபிரச்சினையை உருவாக்குகிறார்கள், போதை மருந்தை கொண்டுவந்து விநியோகம் செய்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே செனட்டர்கள் தரப்பில் ஊடகங்களிடம் கூறுகையில், வெள்ளை மாளிகையில், துணை அதிபர் மைக் பென்ஸ், அதிபர் ட்ரம்ப் மருமகன் ஜராட் குஷ்னர், தலைமை அதிகாரி மைக் முல்வானே, ஜனநாயகக்கட்சி, குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் நீண்ட ஆலோசனையிலும், சமரசப் பேச்சிலும் ஈடுபட்டனர். இதில் உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. ஆதலால் சனிக்கிழமை நள்ளிரவு முதல் 'ட் டவுன்' தொடங்கிவிடும் எனத் தெரிவித்தனர்.

# சோமாலியாவில் 11 தீவிரவாதிகள் அமெரிக்க வான் தாக்குதலில் பலி!

மொகாடிஸு,டிசெ.23

சோமாலியாவில் அமெரிக்க வான்தாக்குதலில் 11 தீவிரவாதிகள் பலியாயினர்.

சோமாலியாவில் அல் - கொய்தாவின் ஆதரவு பெற்ற அல்- ஷபாப் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறாா்கள். இவர்களின் கொட்டத்தை ஒடுக்க சோமாலிய இராணுவம் போராடி வருகிறது. மற்றொருபுறம் சோமாலியா மற்றும் ஆபிரிக்க நாடுகளின் கூட்டுப் படைகளுடன் இணைந்து அமெரிக்க இராணுவம் அங்கு அல் - ஷபாப் தீவிரவாதிகளுக்கு எதிராக வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், தலைநகர் மொகாதடிஸுவில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பெலட் அமின்என்கிற இடத்தில்அல்-ஷபாப் இயக்க நிலைகளைக் குறிவைத்து அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. அடுத்தடுத்து 2 முறை நடத்தப்பட்ட வான்தாக்குதல்களில் அல் - ஷபாப் தீவிரவாதிகள் 11 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். அதே சமயம் இந்த வான்தாக்குதல்களில்பொதுமக்கள்தரப்பில் உயிரிழப்போ, காயமோ ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கனில் இருந்தும் அமெ. படை வாபஸ்!



வொஷிங்டன்,டிசெ.23

சிரியாவைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் இருந்தும் தனது படை வீரர்களை வாபஸ் பெற அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அங்கு தற்போது 14 ஆயிரம் அமெரிக்க படைவீரர்கள் உள்ளனர். அவர்களில் 7 ஆயிரம் பேரை வாபஸ் பெற அமெரிக்கா முடிவு செய்துள்ளது

அமெரிக்காவில் வாஷிங்டன் பென்டகன் இராணுவத் தலைமையகம், நியூயோர்க் உலக வர்த்தக மையம் ஆகியவற்றின் மீது பின்லேடன் ஆதரவு அல்கொய்தா தீவிரவாதிகள் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்தனர். 2001 ஆம் ஆண்டு செப்டம் பர் 11 ஆம் திகதி நடந்த இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து, அல்கொய்தா பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் தந்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்து அங்கு தலிபான்களை ஆட்சியில் இருந்து அகற்றியது. அங்கு தொடர்ந்து 18 ஆண்டுகளாக தலிபான்களை எதிர்த்து அமெரிக்க படைகள் சண்டையிட்டு வருகின்றன.

அங்கிருந்து அமெரிக்கப் படைகள் விலகுகின்றமை ஆப்கானிஸ்தான் போரை அமெரிக்கா முடிவுக்கு கொண்டு வருவதற்கான தொடக்கமாகப் பார்க்கப்படுவதாக 'வோல் ஸ்டிரீட் ஜெர்னல்' பத்திரிகை கூறுகிறது. ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக விலக இன்னும் பல மாதங்கள் ஆகலாம் என அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது.

சிரியாவை தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் இருந்தும் அமெரிக்க படைகள் விலகுவது சா்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளன. அதேநேரத்தில் அமெரிக்க படைகள் வாபஸ் பெறப்படுவதால் உள்நாட்டு பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாது என ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கனி கூறினார்.

# நேபாளத்தில் விபத்தில் 23 பேர் பலி!

நேபாளத்தில் கல்லூரி மாணவர்கள் சென்ற பஸ் பள்ளத்தாக்கில் வீழ்ந்து மோசமான விபத்துக்குள்ளானதில் 23 பேர் பலியாகினர் பலர் காயமடைந்தனர்.

மேற்கு நேபாளத்தில் வெள்ளிக்கிழமை மாலை தாவரவியல் சார்ந்த களப் பயிற்சிக்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 37 பேர் பஸ் ஒன்றில் சென்றனர்.

அந்த பஸ் வழியில் தடுமாறி பள்ளதாக்கில் விழுந்தது. இந்த விபத்தில் 23 பேர் பலியாகினர். இதில் 2 பேர் ஆசிரியர்களும் சாரதியும் அடங்குவர். பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிவேகமாக பஸ்ஸை செலுத்தியமையே விபத்துக்குக் காரணம் என்று முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேபாளத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே, மோசமான சாலைகளால் மலைப்பாதைகளில் அதிகஅளவில் விபத்துகள் நடந்து வருகின்றன. கடந்த வாரம் மலைப் பாதையில் ஏற்பட்ட விபத்தில் 15 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# புடின் மீண்டும் திருமணம்

ரஷ்ய அதிபர் புடின் மீண்டும் திருமணம் செய்ய இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

66 வயதாகும் ரஷ்ய அதிபர் புடின் தமது சொந்த விடயங்களில் எப்போதுமே அதிகம் இரகசியம் பேணுபவர்.

புடின் 1983 ஆம் ஆண்டு லியுட்மில்லா புதினா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். இவர்களது 30 வருட திருமண பந்தம் கடந்த 2014 ஆம் ஆண்டு முறிந்தது.

இந்தநிலையில் புடின் மீண்டும் திருமணம் செய்ய இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட புடினிடம் பத்திரிகையாளர் கேட்ட போது, விரைவில் ஒரு கட்டத்தில. மதிப்பிற்குரிய நபர் ஒருவரைத்திருமணம்செய்து கொள்வேன் என்று கூறியுள்ளார்.

ஒலிம்பிக்கில் ஜிம்னாஸ்டிக் பிரிவில் பதக்கம் வென்ற ரஷ்ய வீராங்கனை அலினா காபாயிவாவுக்கும் ரஷ்ய அதிபர் புடினுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன. ஆனால் இதனைப் புடின் மறுத்தார். இந்த நிலையில் தனது திருமணம் குறித்த கேள்விக்கு புடின் பதிலளித்திருக்கிறார்.

1999 டிசெம்பர் முதல் ரஷ்யாவின் அசைக்க முடியாத தலைவராக புடின் விளங்கி வருகின்றார்.



அதிபர் தேர்தலின் போது வாக்களிக்கும் புடின்...

## திருவருகைக் காலம் சமாதானத்தை உருவாக்கும் காலம்

திருவருகைக் காலத்தின் பொருளை நினைவுறுத்தும் வண்ணம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் டிசம்பர் 19 அன்று தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டார். சமாதானத்தின் இளவரசராம் இயேசுவின் வருகைக்கு நம்மையே தயாரிக்கும் ஒரு காலம் திருவருகைக் காலம். நம்மோடும் நம் அயலவரோடும் சமாதானத்தை உருவாக்கும் காலம் இது என அதில் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## திருத்தந்தையின் 82வது பிறந்தநாளுடன் 636 படங்கள்

கடவுளின் திட்டத்தை மதிக்கத் தெரிந்ததால் அமைதி காத்த ஒரு மனிதராக வாழ்ந்த புனித யோசேப்பைப் போல் இருப்பீர்களாக என்கிறார் திருத்தந்தை. டிசம்பர் 16 தன் 82வது பிறந்த நாளில் சாந்தா மார்த்தா மருந்தகத்தின் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் திருத்தந்தை கொண்டாடிய பிறந்தநாள் படத்துடன் இதுவரை அவரது இன்ஸ்கிராம் முகவரியில் 636 படங்கள் வெளியாகியுள்ளன.

# குகநாதனின் கத்தோலிக்க பத்திரிகைப் பணியை கௌரவிக்கின்றது யாழ் மறை மாவட்டம்

எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் 2018 ஆம் ஆண்டு ஊடகப்பணியில் 40 ஆண்டுகளை நிறைவு செய்கிறார் என்பது வரவேற்கப்பட வேண்டிய செய்தியாகும். திருவாளர் எஸ்.எஸ். குகநாதனின் ஊடகவியற் பணிகளை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்கள் சார்பாக வெகுவாகப் பாராட்டி தொடருங்கள் தங்கள் பணியை என வாழ்த்துகிறது.

இவரின் பத்திரிகைப்பணியில் கத்தோலிக்க திருச்சபைக்கு ஆற்றி வரும் பணியை யாழ் மறைமாவட்டம் ஏற்கனவே கௌரவித்துள்ளது என்பது பலரும் அறியாத உண்மையாகும். 2015ஆம் ஆண்டு பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குநர் யாழ் பல்கலைக்கழக மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக ஊடக வருகை விரிவுரையாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரால் நடத்தப்பட்ட யாழ் ஆயருடன் செய்தியாளருக்கான சந்திப்பில் எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் விருது வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அந்தப் படத்தை இவ்வாக்கத்துடன் நோக்கலாம். திருவாளர் எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் பணி தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.



## உண்மையின் எண்ணங்கள்

### திருவாளர் எஸ்.எஸ்.குகநாதனின் 40 ஆண்டு கால பத்திரிகைப்பணி

எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் ஊடகப் பணியில் 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் 'ஊடகக்காட்டில் 40 ஆண்டுகள்' என்னும் நிகழ்வு 29 டிசெம்;பர் 2018 அன்று இடம்நடைபெறவுள்ளது என்பது மகிழ்வான செய்தியாகும்.

1982 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருமட மாணவனாக பயிற்சி பெற்ற போது ஈழநாடு பத்திரிகையில் பணியற்றிய எஸ்.எஸ்.குகநாதன் அவர்களை முதலில் சந்தித்தேன். இதன் பின்னர் கத்தோலிக்க செய்திகளை அவர் மூலமாக அவ்வப்போது வெளியிடுவதுண்டு. 1983ஆம் ஆண்டு இனப்பிரச்சினையின் பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் இருந்து யாழ் மறை மாவட்டத்தில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை மேற்கொண்ட காலத்தில் அவர் வெளியிட்ட றஜனி என்ற நாவல் பருவ இதழை வெளியிட்டுக்கொண்டிருந்தார். அதில் வெளியிடுமாறு நாவல் ஒன்றையும் எழுதி கொடுத்திருந்தேன். அந்த பருவ இதழ் பின்னர் நிறுத்தப்பட்டது. பின்னர் 2000 ஆம் எனது பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம் என்ற நூல் வெளியிடப்பட்ட பின்னர் 2001 ஆம் ஆண்டு வெளிநாடு சென்ற போது பிரான்ஸ் நாட்டிற்கு சென்று அங்கு வெளிவரும் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்தில் திருவாளர் எஸ்.எஸ்.குகநாதன் அவர்களையும் துணைவியாரையும் சந்தித்து பத்திரிகை அடிப்படைகள் என்ற நூலுக்கு பேட்டி எடுத்து அந்த நூலில் வெளியிட்டுள்ளேன். ஊடகக்கல்வியை லண்டனில் முடித்து வரும்போது யாழ் நகரில் டான் தொலைக்காட்சியை இயக்கிக் கொண்டிருந்தார். எல்.பி.என். கேபிள் சேவை மூலமாக நாம் இயக்கிய ரீ.சி.என்.எல். தொலைக்காட்சியுடன் இணைந்து செயற்பட்டோம். 2011ஆம் ஆண்டு நடத்தப்பட்ட யாழ் ஆயருடன் செய்தியாளருக்கான சந்திப்பில் எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் விருது வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

## பளு தூக்கலில் தங்கம் வென்றது யாழ் பத்திரிசியார் கல்லூரி



இலங்கைப் பாடசாலைகள் பளுதூக்கல் சம்மேளனம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் பளுதூக்கல் போட்டியில் யாழ் பத்திரிசியார் கல்லூரிக்கு தங்கப் பதக்கமும் இரு நான்காம் இடங்களும் கிடைத்துள்ளது.

கேகாலை இராஜகிரி மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த றொ.எக்லேசியா 62 கிலோ எடைப் பிரிவில் 125 கிலோ பளு தூக்கித் தங்கப் பதக்கம் பெற்றார். 56 கிலோ எடைப் பிரிவில் ம.வினோதன் 130 கிலோ பளு தூக்கி நான்காம் இடத்தையும், 62 கிலோ எடைப் பிரிவில் அ.உதயராஜ் 145 கிலோ பளு தூக்கி நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். தொடருங்கள் வெற்றிப் பயணத்தை என காலைக்கதிர் கிறிஸ்தவ இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## குமுழமுனை நாச்சிக்குடா பங்குபீடப் பணியாளர்களின் சுற்றுலா



குமுழமுனை நாச்சிக்குடா பங்கு பீடப்பணியாளர்களுக்கான சுற்றுலா ஒன்று 18 டிசெம்பர் 2018 அன்று பங்குத் தந்தை றெனாலட் செறிலினஸ் சுமன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் யாழ் நகருக்கு மேற்கொள்ளப்பட்டது. கொழும்புத்துறையில் புனித யோசவ்வாஸ் அடிகளார் வந்து இறங்கிய இடம் – புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி – பாசையூர் பனித அந்தோனியார் ஆலயம் – யாழ் புனித மரியன்னை பேராலயம் – யாழ் ஆயர் இல்லம் போன்ற இடங்களுக்குச் சென்ற அவர்கள் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படத்தை காலைக்கதிர் கிறிஸ்தவ இதழ் அன்பு நெஞ்சங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

## கிளி. - பரந்தன் திருச்சிலுவை கன்னியர்கள் வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் திறப்பு






கிளிநொச்சி பரந்தன் திருச்சிலுவை கன்னியர்களின் வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் 11 டிசெம்பர் 2018 அன்று திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ இதழ் அன்பு நெஞ்சங்கள் இங்கே பார்வை இடலாம்.

# யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய பன்னாட்டு மாநாடு



புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டை நோக்கி - யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை அமைத்த கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய பன்னாட்டு மாநாடு நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம் இதுவாகும்;. இதில் யாழ் மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் பல சமயத் தலைவர்கள் உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்கள் என பலரையும் காணலாம்.

# நந்திக்கடலில் பாய்ந்த இராணுவ வாகனம்!



முல்லைத்தீவு, டிசெ. 23

மாங்குளம் – முல்லைத்தீவு பிரதான வீதியால் பயணித்த இராணுவ வாகனம் ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து முல்லைத் தீவு நந்திக்கடலில் பாய்ந்தது.

இதனால், அந்த வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். நேற்று முன் தினம் மழை பெய்து கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# ஐக்கிய தேசிய கட்சிக்கு சவால் விடும் மொட்டு

கொழும்பு, டிசெ. 23

ஐக்கிய தேசியகட்சியினர் மக்கள் ஆணையைக் கொண்டிருப்பதாக கூறுவார்களாயின் அவர்கள் முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என பொதுஜன பெரமுன சவால் விடுத்துள்ளது.

அத்தோடு நாடாளுமன்றில் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கும் ஒரு பிரேரணை கொண்டுவந்தால் அதற்குத் தமது கட்சி ஆதரவளிக்கும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# மன்னாரில் சூடுபிடித்துள்ள பண்டிகைக்கால வியாபாரம்



மன்னார், டிசெ. 23

மன்னார் நகரசபைக்குற்பட்ட பகுதிகளில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைக்க இடம் வழங்கப்பட்டுள்ளதையடுத்து பண்டிகைக்கால வியாபாரம் சூடு பிடித்துள்ளது.

அந்தப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு வியாபாரங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் நத்தார், புதுவருட பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட வர்த்தகர்களுக்கு கேள்வி கோரலின் அடிப்படையில் இடம் வழங்கப்படும்.

அந்த வகையில் மன்னார் நகரசபைக் குட்பட்ட பகுதிகளில் சுமார் 300 இற்கும் அதிகமான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த இடங்களில் வர்த்தகர்கள் வியாபாரநிலையங்களை அமைத்து பண்டிகைக் கால வியாபாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை பண்டிகைக்கால தற்காலிக வியாபார நிலையங்களில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ)

# வீண் வதந்திகளை பரப்பி ஐ.தே.கவை உடைக்கலாம் எனக் கனவு காணாதீர்!

## மஹிந்த அணிக்கு ரணில் பதிலடி



கொழும்பு, டிசெ. 23

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. எனது பிரதமர் பதவியை எனது கட்சிக்குள் இருக்கும் எவரும் குழிதோண்டிப் பறிக்க முயலமாட்டார்கள். வீண்வதந்திகளைப் பரப்பி ஐ.தே.கவை உடைக்கலாம் எனக் கனவு காண வேண்டாம் என மஹிந்த அணியினரிடம் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான சதி முயற்சிகள் அந்தக் கட்சிக்குள்ளேயே எழுந்துள்ளன என மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கை செய்தியாளர் வினவியபோதே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# பொறுப்பேற்றார் ரவி!



கொழும்பு, டிசெ. 23

மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட அவர், புதிய அமைச்சானது ஒரு புதிய அனுபவமாகவும் ஒரு சவாலாகவும் காணப்படுகின்றது. இது ஒரு புதிய தொடக்கத்திற்கான நேரம் என்று தெரிவித்தார்.

நல்லாட்சி அரசில் நிதியமைச்சராகப் பதவி வகித்த ரவி கருணாநாயக்க, இரண்டு வருடங்களின் பின்னர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

எனினும், மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட பர்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸுடன் தொடர்புகளைப் பேணி வந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பதவிக்காக சம்பந்தனிடம் கெஞ்சுகின்றார் சமரசிங்க

இரா.சம்பந்தன் நீண்டகால அரசியல் அனுபவம் உள்ளவர் என்ற அடிப்படையில் கௌரவமான முறையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எம்மிடம் ஒப்படைத்துச் செல்வதே சிறந்ததாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சி தலைவராக இருவர் இருக்கின்றனர் என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். அதனை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். தற்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தகுதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கே காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் 16 உறுப்பினர்கள் மாத் திரமே உள்ளனர். அதிலும் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 98 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டமைப்பு முயற்சித்தாலும் அந்த எண்ணிக்கையை எட்ட முடியாது.



நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ளவர் என்ற அடிப்படையில் தம்மிடம் எதிர்க்கட்சிப் பதவி வகிப்பதற்கான பெரும்பான்மை இல்லை எனும்போது கௌரவமாக அதனை எம்மிடம் ஒப்படைத்து விலகி விடுவதே சிறந்ததாகும். பெரும்பான்மையற்ற ஓர் அரசின் அமைச்சரவையே நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எவ்வாறு வேலை திட்டங்களை முன்னெடுக்கின்றார்கள் என்பதை அவதானித்து எதிர்க்கட்சியாக நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் – என்றார்.

# சர்வாதிகாரத்துக்குத் துணைபோன ஊடகங்கள் சரிநிகராகச் செய்திகளை வெளியிட வேண்டும்

## ஊடகத்துறை அமைச்சர் மங்கள வலியுறுத்து

காழும்பு, டிசெ. 23

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியிலிருந்து சர்வாதிகார ஆட்சிக்குத் துணைபோன ஊடகங்கள் இனிமேல் சரிநிகராக – நாட்டு மக்களின் நலன் கருதி – நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்காமல் செய்திகளை வெளியிடவேண்டும்.

– இவ்வாறு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்னிலையில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சராகப் பதவியேற்ற மங்கள சமரவீர, நேற்று முன்தினம் பிற்பகல் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றார். அதன் பின்னர் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கைச் செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடக சுதந்திரத்தை சில ஊடகங்கள் தவறாகப் பயன்படுத்தியுள்ளன. ஒக்டோபர் 26 அரசியல் சூழ்ச்சிக்கு சில ஊடகங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவை வழங்கியுள்ளன.

நாட்டில் மீண்டும் இரத்தக்களறி ஏற்படக்கூடிய சம்பவங்களுக்கு ஊடகங்களும் துணைபோயுள்ளன என்பதை நினைக்கும்போது கவலையாக உள்ளது.

நாட்டின் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகம் விளங்குகின்றது என்பதை ஊடக நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் உணராமல் நடந்துகொண்டுள்ளார்கள். இனிமேலாவது அவர்கள் திருந்தவேண்டும். எம்மைத் துதிபாடச் சொல்லி அவர்களிடம் நாம் கேட்கவில்லை. நடுநிலையுடன் மட்டும் செயற்பட்டால் போதும்.

அதேவேளை, ஜனநாயகத்தை விரும்பும் ஊடகவியலாளர்கள் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்கள் தங்கள் ஊடகப் பணிகளைத் துணிவுடன் முன்னெடுக்க வேண்டும். அவர்களின் குறைநிறைகளை நாம் தீர்த்து வைப்போம் – என்றார். (ஐ)

# பெல்ஜியம் முதலிடத்தில்




உதைபந்து இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த, உதைபந்து அணிகளின் தரவரிசைப் பட்டியலை சர்வ தேச உதைபந்து சம்மேளனம் வெளியிட் டுள்ளது.

இந்தப் பட்டியலில் பெல்ஜியம் அணி, 1727 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள் ளது. ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடரில் சிறப்பாக விளையாடியதன் பின்னணியில், அந்த அணி இந்த ஏற்றத்தைக் கண்டுள்ளது.

உலக சம்பியன் அணியான பிரான்ஸ் அணி, 1726 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. நடை பெற்று முடிந்த உலகக் கிண்ண தொடரில், பிரான்ஸ் அணி, குரேஷியா அணியை வீழ்த்தி மகுடம் சூடியமை குறிப்பிடத்தக்கது.

பிரேசில் அணி 1676 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், குரேஷியா அணி 1634 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், இங்கிலாந்து 1631 புள்ளிகளு டன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

தொடர்ந்து, போர்த்துக்கல் 1614 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும், உருகுவே 1609 புள்ளிகளு டன் ஏழாவது இடத்திலும், சுவிற்ஸர்லாந்து 1599 புள்ளிக ளுடன் எட்டாவது இடத்திலும், ஸ்பெயின் 1591 புள்ளிக ளுடன் ஒன்பதாவது இடத்திலும், டென்மார்க் 1589 புள்ளிகளுடன் பத்தாவது இடத்திலும் உள்ளன.

மேலும் முன்னாள் உலக சம்பியன் அணிகளான ஆர்ஜென்ரீனா 11ஆவது இடத்திலும், ஜேர்மனி 16 ஆவது இடத்திலும், இத்தாலி 18ஆவது இடத்திலும் உள்ளன.

# கோஹ்லியை திட்டாதீர்கள்



ஆஸ்திரேலிக் கிரிக்கெட் அணியின் தலைவர் டிம் பெய்னுடன், மோதல் போக்கைக் கடைபிடித்த விராட் கோஹ்லியை திட்ட வேண்டாமென, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான சொயிப் அக்தர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பேர்த் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின், இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடும் போது, கோஹ்லி, டிம் பெய்னுடன் வார்த்தைப்போரில் ஈடுபட்டார். இருவரும் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. இதன் பிறகு நடுவர் தலையிட்டு இருவரையும் சமாதானப் படுத்தினார்.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து பல இன்னாள் மற்றும் முன்னாள் வீரர்கள், விமர்சனம் செய்து வருகின்றனர்.

இதற்கிடையில் இச்சம்பவம் குறித்து சொயிப் அக்தர் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்.

விராட் கோஹ்லி தற்போதுள்ள மொடர்ன் கிரிக்கெட்டில் தலை சிறந்த வீரர். போட்டி கிரிக்கெட்டில், ஆக்ரோஷம் ஒரு பகுதி. குறிப் பாக ஆஸ்ரேலியாவில் விளையாடும்போது, குறிப்பிட்ட அள வில் ஆக்ரோஷம் இருக்க வேண்டும். தயவு செய்து விராட் கோஹ் லியை வசைபாடுவதை நிறுத்துங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மூன்றாவது டெஸ்ட்டில் களமிறங்குவாரா தவான்?

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், இந்தியா அணியின் துடுப்பாட்ட வீரரான ஷிகர் தவான் விளையாடுவாரா என்ற கேள்வி இரசிகர்கள் மனதில் எழுந்துள்ளது.

மெல்போர்னில் தங்கியிருக்கும் வீரர்களின் விடுதிக் குச் சென்றுள்ள ஷிகர் தவான், அவர்களுடன் புகைப் படமெடுத்து சமூகவலைத்தளங்களில் பதிவேற்றியி ருந்தார்.

இந்த நிலையில் மந்தமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வரும், ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான கே.எல். ராகுல் மற்றும் முரளி விஜய்க்கு பதிலாக ஷிகர் தவான், களமிறங்குவாரா என்ற சந்தேகம் இரசிகர்கள் மனதில் எழுந்துள்ளது.

அதே சமயம், தவானின் வீடு மெல்போர்ன் நகரில் தான் உள்ளது. தவானின் மனைவி மற்றும் குழந்தைகள் அங்கு தான் வசிக்கிறார்கள். தவான் கிரிக்கெட் போட்டி




கள் இல்லாத நாள்களில் அங்கே தான் தங்கி இருப் பார். எனவே, தவான் தன் வீட்டில் இருந்து சக வீரர்களை சாதாரணமாக காண சென்று இருக்கலாம் எனக் கூறப் படுகின்றது.

மெல்போர்னில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில், இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களில் நிச்சயம் மாற்றம் நிகழும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், ராகுல் மற்றும் முரளி விஜய்க்கு பதிலாக ஷிகர் தவான், களமிறங்குவாரா என்ற எந்த அறிவிப்பும் இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட வில்லை. (ஐ)

# ரிஷப் பந்த் குறித்து ஆஸியை பயமுறுத்துகிறார் மக்ஸ்வெல்




ரிஷப் பந்தின் திறமையில் சிறியவொரு பகுதியை மட்டுமே நாம் பார்த்துள்ளோம் என ஆஸ்திரேலியா அணிக்கு மறைமுகமாக பயம் காட்டியுள்ளார் ஆஸ் திரேலியா அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிளென் மக்ஸ்வெல்.

கிளென் மக்ஸ்வெலும், ரிஷப்பந்தும் இணைந்து ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக விளையாடி வருகின்றனர். இந்த நிலையில் அவருடனான அந்த அனுபவத்தை கொண்டு, ஆஸ்திரேலியாவுக்கு இந்த எச்சரிக்கையை மக்ஸ்வெல் விடுத்துள்ளார்.

இதுகுறித்து மக்ஸ்வெல் கூறிய கருத்துக்கள் இவை, ரிஷப் பந்த் மிகவும் சிறப்பான கிரிக்கெட் திற மையை பெற்றுள்ளார். ஆடுகளத்தின் மீது ஒரு சிறிய வெடிப்பு ஏற்பட்டிருப்பதை போன்றுதான், ரிஷப் பந் தின் திறமையில் சிறிய பகுதியை மட்டுமே நாம் பார்த்துள்ளோம்.

ரிஷப் பந்த் துடுப்பெடுத்தாடும் போதெல்லாம் நான் எனது தொலைக்காட்சியால் இழுக்கப்பட்டு விடுவேன். அவர் களத்தில் இறங்கிவிட்டால், அவரது துடுப்பாட் டத்தைப் பார்க்க சுப்பராக இருக்கும்.

ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக இருவரும் இணைந்து விளையாடியுள்ளோம். அப்போது அபார மான சில இன்னிங்ஸை எங்களுக்கு அளித்துள்ளார். மாறுபட்ட ஷொட் அடிப்பதற்கு ஏற்றபடி உடலை அவரால் எளிதாக மாற்றிக்கொள்ள முடியும் என கூறியுள்ளார்.

# ரொனால்டோவை மீண்டும் மட்ரிட்டுக்கு அழைத்த சிறுமி




உலகஉதை பந்தாட்ட ஜாம் பவானாக ஒரு வராக வலம் வருகிறார் கிறிஸ்ரியானோ ரொனால்டோ. இவர் ஊதிய பிரச்சினை காரணமாக ரியல் மட்ரிட் அணியிலிருந்து யுவாண்டஸ் அணிக்கு மாறியிருந்தார்.

இந்தநிலையில்கடந்த சிலநாள்களாக இணையத்தில் ஒரு புகைப்படம் வைரலாகியுள்ளது.அதில் ரொனால்டோ ரசிகையான சிறுமியொருவர் cr7 come back என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகை ஒன்றை கையில் ஏந் தியவாறு காணப்படுகின்றார்.

அதாவது ரொனால்டோவை மீண்டும் மட்ரிட் வரும றுஅழைப்பு விடுத்துள்ளார் சிறுமி மட்ரிட் யேர்சியை அணிந்தவாறு இப்பதாகையை ஏந்திய வண்ணம் காணப்படுகிறார்.

ரொனால்டோவின் விலகலால் மட்ரிட் ஆட்டம் கண் டுள்ள நிலையில் இச்சிறுமியின் புகைப்படம் இணை யத்தில் வைரலாகியுள்ளது.

ரொனால்டோவின் விலகலை அடுத்து ரியல் மட்ரிட் அணி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. (ஐ)

## கொட்டித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவியளிக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர், மாவட்ட செயலகத்தினர், இடர் முகாமைத்துவப் பிரிவினர், தன்னார்வத் தொண்டு நிறுனத்தினர் எனப் பலரும் ஈடுபட்டுள்ளனர்.

மழை இடைவிடாது தொடர்வதால் நிலைமை மேலும் மோசமாகலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் கையில் அகப்பட்டவற்றை எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்தனர். வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் மும்முரமாக ஈடுபட்டனர்.

வழமைக்கு மாறாக 225 தொடக்கம் 370 மில்லி மீற்றர் வரை மழை பெய்துள்ளது. இதனால் பல இடங்களிலும் அதிக வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும் நிரம்பி பாய்கின்றமையினால் வீதிப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டு மக்கள் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

சில கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட மக்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளமையால் மக்கள் மேலும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 38 அடியாக உயர்ந்துள்ளதோடு அனைத்து வான் கதவுகளும் முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளன. இரணைமடுக் குளத்தின் நீர் கொள்ளளவு உயரம் 36 அடி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முல்லைத்தீவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் மக்கள் வெள்ள நீரில் மூழ்கி பாதிப்புக்களைச் சந்தித்தனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு கிராமங்கள் நீரில் மூழ்கி பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர் அந்தவகையில் 688 குடும்பங்களைச் சேர்ந்த 2244 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் 599 குடும்பங்களை சேர்ந்த 1908 பேர் 16 இடைத்தங்கல் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளதோடு இவர்களுக்கான சமைத்த உணவு வழங்கப் பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து கனகராயன் ஆற்றுப்படுக்கையின் தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு பிரதேச செயலத்தில் உத்தியோகத்தர்கள் தங்கியிருந்தனர். எனினும் நேற்றுப் பிற்பகல் திடீரென வெள்ளம் புகுந்தமையால் அங்கிருந்த உத்தியோகத்தர்களை மீட்பதில் பாரிய நெருக்கடி நிலை காணப்பட்டது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் படகு மூலம் அலுவலக ஆவணங்களும் பணியாளர்களும் மீட்கப்பட்டனர்.

இதேவேளை கிளிநொச்சியில் தொடர்ந்தும் வெள்ளம் அதிகரிக்கும் நிலையில் மீட்புப் பணியில் தொடர்ந்தும் படையினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எதிர்க்கட்சிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் செயலகம் இன்னமும், இரா.சம்பந்தனின் பொறுப்பிலேயே இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அந்தப் பதவியில் இருந்து நீக்கும் அறிவிப்பை வெளியிடாமல், மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்வதாக, சபாநாயகர் கரு ஜெயசூரிய கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தார்.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தன.

அத்துடன் மஹிந்த ராஜபக்ஷவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பாகவும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதையடுத்து, இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து விட்டு, நேற்று முன்தினம் முடிவை அறிவிப்பதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய கூறியிருந்தார்.

எனினும், நேற்று முன்தினம் அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான தமது முடிவைச் சபாநாயகர் அறிவிக்கவில்லை.

இது குறித்து ஆராய தெரிவுக் குழு ஒன்றை அமைக்கும் யோசனை அடங்கிய பிரேரணை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீரவும் கடிதம் ஒன்று தந்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் எனக்கு மேலதிக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இவற்றையெல்லாம் ஆராய்ந்து விட்டு, எனது நிலைப்பாட்டை கூடிய விரைவில் சபையில் அறிவிப்பேன் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று முன் தினம் கூறியிருந்தார்.

இதனால், எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற குழப்பம் தொடர்ந்து நீடித்து வருகிறது.

அதேவேளை, இரா.சம்பந்தனின் பொறுப்பிலேயே எதிர்க்கட்சித் தலைவர் செயலகம் இருக்கிறது.

சபாநாயகர் தமது முடிவை அறிவிக்காததால், அவர் அதனை இன்னமும் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்தவினால், பிரதமரின் அதிகாரபூர்வ வதிவிடமான அலரி மாளிகைக்குச் செல்ல முடியவில்லை.

ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து வெளியேறாததால், அலரி மாளிகைக்குச் செல்ல முடியாத நிலையில் மஹிந்த பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இரா.சம்பந்தன் கௌரவமான முறையில் மஹிந்தவிடம் ஒப்படைக்கவேண்டும் என்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

## வான்பாயும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் திறந்துவிடப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப் பாசனப் பொறியியலாளர் என். சுதாகரன் தெரிவித்துள்ளார்.

36 அடி நீர் கொள்ளளவைக் கொண்ட இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் நேற்று முன் தினம் 35 அடியாகக் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையினால் குளத்தின் நீர்மட்டம் மிக வெகுவாக அதிகரித்துள்ளது.

அதிகாலை 2 மணியிலிருந்து குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்துக்காணப்பட்டது. இரணைமடுக் குளத்தில் உள்ள 14 வான் கதவுகளில் 11 வான்கதவுகளை உடனடியாகத் திறந்து விட்டுள்ளதுடன், தாழ் நிலப்பகுதிகளில் உள்ள பாதுகாப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது என்று பொறியியலாளர் என்.சுதாகரன் குறிப்பிட்டார். (ஐ)

## தீர்வுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக ரீதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போராடி வருகின்றது. தடைகள் வந்தாலும் தீர்வுக்கான எமது போராட்டம் ஓயாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியில் நாம் ஒரு கட்சிக்குச் சார்பாகச் செயற்படுவதாகச் சிலர் கூச்சலிடுகின்றனர். ஆனால் உண்மையில் ஜனநாயகத்தைக் காப்பதற்காக நாங்கள் ஜனநாயக ரீதியாகவே செயற்பட்டிருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுவிஸ் வாசல் செந்தமிழ்ச் சோலையின் நிறுவன அனுசரணையுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு கட்சியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே இவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசியல் தொடர்பில் பலரும் பல கருத்துக்களை முன்வைக்கலாம். அது ஜனநாய ரீதியானதே. நாங்களும் ஜனநாயக ரீதியில் தான் செய்பட்டு வருகின்றோம் கடந்த மாதங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் யாவரும் அறிந்ததே.

திருட்டுத்தனமான முறையற்ற விதத்தில் பிரதமரை இல்லாது ஆக்கியமை, அமைச்சரவையை இல்லாமல் செய்த செயற்பாடுகள் அரசமைப்புக்கு முரணாவே இடம் பெற்றுள்ளன. இது அனைவராலும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதற்காகவே நீதிமன்றம் சென்றமையால் நீதிமன்றம் அதற்கான தீர்ப்பை வழங்கி நீதியை நிலைநாட்டியது.

இந்த நீதிமன்றத் தீர்ப்பு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு அமைவாக தற்போது புதிய அரசியல் நகர்வு இடம்பெற்றது. நாங்கள் எமது மக்களுக்கு என்ன தேவையோ அதனை முன்நிறுத்திச் செயற்பட்டு வருகின்றோம்.

சிலர் எமது செயற்பாட்டைப் பார்த்து ஒரு கட்சிக்கு சார்ந்தாக நடப்பதாகக் கூச்சல் இடுகின்றார்கள். ஆனால் நாங்கள் ஜனநாயக ரீதியாகச் செயற்பட்டு ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளோம்.

இதேபோன்று தான் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள அரசியல் தீர்வைக் கண்டடைவோம்.

சமநேரத்தில் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் பகுதிகளைப் புனரமைத்தல், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் மீண்டும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு உறுதுணையாகச் சர்வேத சமூகமும் எங்களுடன் நிற்கின்றது. இந்தத் தருணத்தை நாங்கள் முறையாக பயன்படுத்தி எமது மக்களுக்காக தொடர்ந்தும் செயற்பட்டு வருவோம் – என்றார்.

இந்த நிகழ்வில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அ.பரஞ்சோதி, பிரதேச உறுப்பினர் கலையமுதன், தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். குலநாயகம், மாவட்ட கிளைத்தலைவர் கனகசபாபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-07)

## 2,788...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அவர்களில் ஆயிரத்து 829 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 775 பேர் இடர்பெயர்ந்து 40 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை 3 மணிவரையான நிலவரப்படி வடக்கில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டோரின் விவரத்தை இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

**முல்லைத்தீவு**

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 675 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 170 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 614 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 899 பேர் இடர்பெயர்ந்து 16 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 498 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 501 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 451 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 250 பேர் இடம்பெயர்ந்து 4 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 166 குடும்பங்களைச் சேர்ந்த 548 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 100 குடும்பங்களைச் சேர்ந்த 352 பேர் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 69 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 701 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 550 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 229 குடும்பங்களைச் சேர்ந்த 858 பேர் 7 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் ஒரு வீடு முழுமையாகவும் ஒரு வீடு பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 629 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 341 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 119 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 7 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் ஒரு வீடு முழுமையாகவும் ஒரு வீடு பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பச்சிளைப்பளை பிரதேச செயலர் பிரிவில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் 3 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**மன்னார்**

மன்னார் நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர். (ஐ)

## ஏ-9...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரு தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மல்லாவி கற்குவாரிக் குளம் உடைப்பெடுக்க இருந்த நிலையில் நீர் தாழ் நிலத்தை நோக்கி வெட்டி விடப்பட்டது.

இந்தக் குளத்தில் இருந்து வெளியேறிய நீர் ஏ-9 வீதியில் மாங்குளம் சந்தியை ஊடறுத்தது. இதன் காரணமாக மாங்குளம் சந்தியில் வெள்ள நீரால் ஏ-9 வீதிப் போக்குவரத்து காலை சில மணிநேரம் பாதிப்படைந்தது. அப்பகுதியில் இருந்த வர்த்தக நிலையங்கள், வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்தது.

கற்குவாரி குளத்து நீர் வெளியேற்றப்பட்டமையால் கற்குவாரியடி மற்றும் மாங்குளம் பகுதிகளைச் சேர்ந்த 55 குடும்பங்கள் பாதிப்படைந்து இடம்பெயர்ந்தன. இடம்பெயர்ந்த மக்கள். மாங்குளம் மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

## சம்பந்தனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களமிறங்கியுள்ளன – என்று டளஸ் அழகப்பெரும எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்குலக நாடுகளும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தீவிரமாகச் செயற்பட்டன.

இவ்விரு தரப்பும் இன்று சம்பந்தனுக்காக களமிறங்கியுள்ளன. எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த வரக்கூடாது என்பதில் குறியாக இருக்கின்றன. எம்.பி. பதவியிலிருந்தும் மஹிந்த விரட்டியடிக்கப்படவேண்டும் என்பது தான் மேற்படி தரப்புகளின் இலக்காக இருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து வெளியேறிய சம்பந்தன் வேண்டுமென்றே மீண்டும் அங்கு வந்துள்ளார் – என்றார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக் கொள்வதற்காக எத்தகைய சவால்கள் வந்தாலும் அவற்றுக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்போம் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

அதிகளவு மழைவீழ்ச்சியாக கிளிநொச்சி – மாங்குளம் – வவுனியாவில் 365 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 237 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், ஒட்டுசுட்டானில் 302 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், ஆனையிறவில் 22 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகி உள்ளது. (ஐ-07)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உடுத்துறை, ஆழியவளை, செம்பியன்பற்று, மருதங்கேணி, தாளையடி போன்ற கிராமங்கள் முற்றாக வெள்ள நீரில் முழ்கின.

இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

பொது இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தால் சமைத்த உணவு வழங்கப்பட்டது. (ஐ)

# கிளிநொச்சி மூழ்கியது......




















# முல்லைத்தீவு தத்தளித்தது...





# சீறிப் பாயும் இரணைமடு...





இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.